## 10.ஆம் வகுப்பு–தமிழ்–நிகழ்கலை 2–வினாத்தாள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

1)நிகழ் கலையில் பயன்படுத்தப்படும் பித்தளைச் செம்பு அல்லது சிறிய குடம்––––– எனப்படும்

அ)தந்துபி ஆ)கரகம் இ)பாத்திரம் ஈ)மேளம்

2)கூற்று : கரகத்தில் மணல் அல்லது பச்சரிசி கொண்டு நிரப்புவர்

காரணம்: தலையில் செம்பு நிற்கும் அளவிற்குஎடையை ஏற்றுவதற்கு

அ)கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ)இரண்டும் தவறு ஈ)கூற்று தவறு, காரணம் சரி

3) நீரற வறியாக் கரகத்து – என்று கரகத்தைக் குறிப்பிடும் நூல்

அ)அகநானூறு ஆ) சிலப்பதிகாரம் இ)புறநானூறு ஈ)பதிற்றுப்பத்து

4)மாதவி ஆடிய ஆடல்களாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவது எத்தனை?

அ)8 ஆ)9 இ)10 ஈ)11

5)கரகாட்டத்திற்கு அடிப்படையாக கருதப்படுவது………………

அ)நிகழ்கலை ஆ)குடக்கூத்து இ)பாவைக்கூத்து ஈ)வெறியாடல்

6)கரகாட்டத்தின் துணை ஆட்டமாகக்கருதப்படுவது–––––––––

அ)காவடி ஆட்டம் ஆ)மயிலாட்டம் இ)ஒயிலாட்டம் ஈ)தேவராட்டம்

7)ஊர்ந்து ஆடுதல்,மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல் முதலான அடவுகள் இடம்பெறுவது

அ)மயிலாட்டம் ஆ)கரகாட்டம் இ)ஒயிலாட்டம் ஈ)குடக்கூத்து

8)கா– என்பதற்கு––––––என்று பொருள்

அ)சண்டையிடுதல் ஆ) சுற்றி ஆடுதல் இ) பாரம் தாங்கும் கோல் ஈ) முடித்தல்

9)ஒயில் ஆட்டத்தில் தனிச் சிறப்பானது எது?

அ)சலங்கை உடன் ஆடுதல் ஆ)கம்பீரமாக ஆடுதல்

இ)வண்ணத் துணிகள் ஈ)இசை

10)ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டத்தைத் தேர்வு செய்க

அ)தேவராட்டம் ஆ)காவடி ஆட்டம் இ)மயிலாட்டம் ஈ)ஒயிலாட்டம்

ஆக்கம்: வெ.க.வாசு, தமிழாசிரியர், அ.உ.நி,பள்ளி, தணிகைப்போளூர், இரா.பே.மாவட்டம்

LIVEWORKSHEETS